தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளின் **(TFSGBV)** வகைப்பாடு மற்றும் வரையறைகள்

**T1 — Image-Based Sexual Abuse**
புகைப்படம் சார்ந்த பாலியல் துஷ்பிரயோகம்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T1.1** | **Non-consensual sharing of intimate imagery** உடன்பாடின்றி அந்தரங்கப் படங்களைப் பகிர்தல் | ஒரு நபரின் அந்தரங்க அல்லது பாலியல் சார்ந்த படங்களை, அவரது அனுமதியின்றிப் பகிர்தல், விநியோகித்தல் அல்லது பயன்படுத்துதல்; இதில், தொடக்கத்தில் அனுமதியுடன் உருவாக்கப்பட்ட அல்லது பகிரப்பட்ட படங்களும் உள்ளடங்குகின்றது. பகிரப்படும் என அச்சுறுத்தினால், அதுவும் பதிவு செய்யப்பட வேண்டும். |
| **T1.2** | **Covert sexual imaging** மறைமுகமாக பாலியல் ரீதியாக படம் எடுத்தல் | ஒரு நபரின் அனுமதியோ அல்லது அவதானிப்போ இன்றி, ரகசியமாக எடுக்கப்படும் பாலியல் ரீதியான படங்கள் ("creepshots") உட்பட, அவர்களின் அந்தரங்க அல்லது பாலியல் ரீதியான புகைப்படங்கள்/காணொளிகளை எடுத்தல், பதிவு செய்தல் அல்லது பெற்றுக் கொள்ளுதல். |

| | | |
|---|---|---|
| **T1.3** | **Cyberflashing / unsolicited sexual content**<br>இணையவழி பாலியல் காட்சிப்படுத்தல் / கோரப்படாத பாலியல் உள்ளடக்கம் | டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் ஒரு நபரின் அனுமதியின்றி அவர்களுக்குப் பாலியல் ரீதியான, வெளிப்படையான அல்லது ஆபாசமான படங்களை அனுப்புவது. |
| **T1.4** | **Morphed, deepfake or AI-generated sexual media**<br>ஆள்மாறாட்டத் தொழில்நுட்பம் (டீப்பேக்/deepfake) செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஒருவரின் முகம் அல்லது குரலை மற்றொருவருடன் பொருத்தி, அச்சு அசல் பார்ப்பது போல் இருக்கும் போலியான வீடியோ அல்லது ஆடியோவை உருவாக்குவது | ஒரு நபரின் அனுமதியின்றி, அவரைப் பாலியல் அல்லது நெருக்கமான உள்ளடக்கத்தில் தவறாகச் சித்தரிக்கும் வகையில்—செயற்கை நுண்ணறிவு (AI) மூலமாகவோ அல்லது பிற வழிகளிலோ—ஒரு படம், காணொளி அல்லது ஒலிப்பதிவை உருவாக்குதல், மாற்றுதல் அல்லது கையாளுதல். |
| **T1.5** | **Non-consensual sexualisation or exposure of images ( Image based abuse that does not fall within any of the above categories T1.1 to T1.4)**<br>ஒப்புதலின்றிய பாலியல்மயமாக்கல் அல்லது புகைப்படங்களை வெளிப்படுத்துதல் (மேலே உள்ள T1.1 முதல் T1.4 வரையிலான எந்தவொரு வகையிலும் அடங்காத புகைப்படம் சார்ந்த துஷ்பிரயோகம்) | ஒரு நபரின் சம்மதம் இல்லாமல், அவருடைய புகைப்படத்தையோ அல்லது அவருடைய உடலின் ஏதேனும் ஒரு பகுதியையோ/பகுதிகளையோ பாலியல் ரீதியாக, ஒரு பொருளாக மட்டும் மதித்து (பாலியல் பண்டமாக ), அவமதிக்கும் வகையில், தனியுரிமையை மீறும் வகையில், அல்லது கலாச்சார ரீதியாக அல்லது மத ரீதியாக |

| | | |
|---|---|---|
| | | தீங்கு விளைவிக்கும் சூழலில் பகிர்வது, பயன்படுத்துவது அல்லது காட்சிப்படுத்துவது ஆகும்; இங்கு அந்தப் புகைப்படம் இயல்பிலேயே பாலியல் சார்ந்ததாகவோ அல்லது தனிப்பட்ட நெருக்கம் சார்ந்ததாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. |

**T2 — Sexual Coercion and Exploitation**

பாலியல் வற்புறுத்தல் மற்றும் சுரண்டல்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T2.1** | **Sextortion/ sexual blackmail/ sexual bribery** பாலியல் மிரட்டல்/ பாலியல் ரீதியான அச்சுறுத்தல்/ பாலியல் இலஞ்சம் | பணம், பாலியல் செயல்கள், மேலும் அந்தரங்கமான தகவல்கள் அல்லது வேறு ஏதேனும் பலனைப் பெறுவதற்காக, அந்தரங்கப் படங்கள் அல்லது தனிப்பட்ட பாலியல் தகவல்களைப் பயன்படுத்துதல் ஆகியவை தொழில்நுட்பம் சார்ந்த அச்சுறுத்தலாகும். |
| **T2.2** | **Online grooming / Technology-facilitated sexual exploitation** இணையவழி பாலியல் தூண்டுதல் / தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் சுரண்டல் | ஒரு குழந்தை அல்லது இளைஞர் உட்பட ஒரு நபரை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தும் நோக்கில் அவரை ஆட்சேர்ப்பு செய்ய, கையாள, |

| | | |
|---|---|---|
| | | வற்புறுத்த, வழிப்படுத்த, விளம்பரம் செய்ய, ஏற்பாடு செய்ய அல்லது அதிலிருந்து இலாபம் ஈட்ட, அந்த நபருடன் நம்பிக்கை, உணர்ச்சிப்பூர்வமான பிணைப்பு அல்லது உறவை வளர்த்துக் கொள்வதற்கு டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துதல். |

**T3 — Harassment, Intimidation and Threats**

துன்புறுத்தல், அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல்கள்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T3.1** | **Online/cyber harassment/ Cyberbullying/ Trolling** இணையவழித் துன்புறுத்தல்/ இணையவழி மிரட்டல்/ கேலி செய்தல் | ஒரு நபரை அச்சுறுத்தும், பயமுறுத்தும், தொந்தரவு செய்யும் அல்லது துஷ்பிரயோகம் செய்யும் வகையில், இழிவுபடுத்தும், புண்படுத்தும் அல்லது அவமதிக்கும் விதமான தகவல்தொடர்புகள் அல்லது புகைப்படங்களை உள்ளடக்கி, தொழில்நுட்பத்தின் உதவியுடன் மீண்டும் மீண்டும் செய்யப்படும் நடத்தை. |
| **T3.2** | **Technology-facilitated threats of physical or sexual violence** தொழில்நுட்பம் சார்ந்து ஏற்படுத்தப்படும்அச்சுறுத் | பாதிக்கப்பட்ட நபரையோ அல்லது அவருடன் தொடர்புடைய மற்றொரு நபரையோ உடல் |

| | | |
|---|---|---|
| | தல்கள்;<br>உடல்ரீதியானவை அல்லது பாலியல் வன்முறை | ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தும் நோக்கம் அல்லது அச்சுறுத்தலை டிஜிட்டல் ஊடகங்கள் வழியாகத் தெரிவிப்பது. |
| **T3.3** | **Digital blackmail/extortion**<br>டிஜிட்டல் மிரட்டல்/பறிமுதல் | ஒரு நபரை பணம் தரக் கோரி, ஒரு செயலை செய்யவோ அல்லது செய்யாமல் இருக்கவோ வற்புறுத்துவதற்காக, அல்லது ஒரு கோரிக்கைக்கு இணங்கவோ கட்டாயப்படுத்தும் நோக்கில், ஒருவரைப் பற்றிய இரகசியங்களை வெளியிடல், அவரது நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல் அல்லது வேறு ஏதேனும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துத்துதல் போன்ற செயலுக்குத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிரட்டல் ஆகும். |

**T4 — Stalking, Surveillance and Technology-Facilitated Coercive Control**

பின்தொடர்தல், கண்காணிப்பு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வற்புறுத்தல் கட்டுப்பாடு

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **T4.1** | **Cyberstalking**<br>இணையவழி பின்தொடர்தல் | தொழில்நுட்ப வழிமுறைகள் மூலம் ஒரு நபரைத் தொடர்ந்து, விரும்பத்தகாத வகையில் அல்லது அச்சுறுத்தும் வகையில் கண்காணித்தல், தொடர்புகொள்ளல் அல்லது பின்தொடர்தல். |
| **T4.2** | **Digital surveillance/monitoring/Technology-facilitated coercive control / control of access**<br>டிஜிட்டல் கண்காணிப்பு / தொழில்நுட்பம் மூலம் எளிதாக்கப்பட்ட கட்டாயக் கட்டுப்பாடு / அணுகல் கட்டுப்பாடு | டிஜிட்டல் சாதனங்கள், இணைய கணக்குகள், இணைய செயலிகள் அல்லது பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மற்றொருவரின் தகவல் தொடர்பு, செயல்பாடுகள் அல்லது நடத்தைகளை அவரது அனுமதியின்றி கண்காணித்தல் அல்லது துஷ்பிரயோகம் மற்றும் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாகச் செயல்படுதல். |

**T5 — Privacy and Disclosure Abuse**

தனியுரிமை மற்றும் அம்பலப்படுத்தல் தொடர்பான துஷ்பிரயோகம்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T5.1** | **Doxxing**<br>அச்சுறுத்தும் தரப்பினரால், ஒருவரின் தனிப்பட்ட தகவலை இணையத்தில் பரப்புதல் | ஒரு நபருக்குத் தீங்கு, அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளில், தொடர்புத் தகவல், முகவரி, பணியிடம் அல்லது குடும்பத் தகவல் |

| | | |
|---|---|---|
| | | போன்ற தனிப்பட்ட, அந்தரங்க அல்லது உணர்திறன் மிக்க தகவல்களை அவரது அனுமதியின்றிப் பொதுவெளியில் வெளியிடுதல். |
| **T5.2** | **Outing**<br>ஒருவரின் பால்நிலை அடையாளத்தை வெளிப்படுத்துதல் | ஒரு நபரின் பாலியல் நாட்டம், பால்நிலை அடையாளம், பால்நிலை வெளிப்பாடு அல்லது பாலியல் பண்புகளை, அவரது அனுமதியின்றி தொழில்நுட்பத்தின் மூலம் மற்றவர்களுக்கோ அல்லது பொதுவெளியிலோ வெளிப்படுத்துதல். |

**T6 — Identity, Account and Access Abuse**

அடையாளம், இணைய கணக்கு மற்றும் அணுகல் துஷ்பிரயோகம்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறைh |
|---|---|---|
| **T6.1** | **Online impersonation/fake profile**<br>இணையவழி ஆள்மாறாட்டம்/போலி இணைய கணக்கு | மற்றொரு நபரை ஏமாற்றுதல், தீங்கு விளைவித்தல், அச்சுறுத்துதல், சுரண்டுதல் அல்லது அவர்களின் நற்பெயருக்கோ பாதுகாப்பிற்கோ சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன், அவருடைய அடையாளத்தைத் |

| | | |
|---|---|---|
| | | தவறாகப் பயன்படுத்தி இணைய சுயவிவரம் அல்லது இணைய கணக்கை உருவாக்குதல் அல்லது பயன்படுத்துதல். |
| **T6.2** | **Hacking/account takeover** கணினி ஊடுருவல் /இணைய கணக்கு ஆக்கிரமிப்பு | பால்நிலை அடிப்படையிலான துஷ்பிரயோகத்தை ஏற்படுத்தும் அல்லது அதற்கு வழிவகுக்கும் வகையில், ஒரு நபரின் டிஜிட்டல் கணக்கு, சாதனம் அல்லது தரவை அனுமதியின்றி அணுகுதல், அதில் தலையிடுதல் அல்லது கட்டுப்படுத்துதல். |

**T7 — Gendered Hate, Trolling and Reputational Abuse**

பால்நிலை அடிப்படையிலான வெறுப்பு, இணைய வழி தாக்குதல்கள் மற்றும் நற்பெயருக்குக்கு அவதூறு விளைவித்தல்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T7.1** | **Gendered/sexist online hate speech** பால்நிலை அடிப்படையிலான / பால் பாகுபாடு தொடர்பான இணைய வழி வெறுப்புப் பேச்சுக்கள் | பால்நிலை அல்லது பிற அடையாளக் காரணியின் அடிப்படையில் ஒரு நபர் அல்லது குழுவைத் தாக்கும் அல்லது அவமதிக்கும் அல்லது பாகுபாடு காட்டும் மொழியைப் பயன்படுத்தும் இணையவழித் தொடர்புகள்; பாலின வெறுப்புப் பேச்சு என்பது பால்நிலை அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| | | வெறுப்பைப் பரப்புவது, ஊக்குவிப்பது, தூண்டுவது அல்லது நியாயப்படுத்துவது ஆகும். |
| **T7.2** | **Gender trolling**<br>பால்நிலை அடிப்படையிலான இணையவழி கிண்டல்கள் | பால்நிலை, பால்நிலை வெளிப்பாடு, பெண்ணியக் கருத்துக்கள் அல்லது பால்நிலை நெறிமுறைகளை மீறியதாகக் மீறப்பட்டதாகக் கருதப்படுவதன் காரணமாக, ஒருவரை அவமானப்படுத்தல், அச்சுறுத்தல்  அல்லது மௌனமாக்குதல் போன்ற நோக்கத்துடன், அவரை இலக்காகக் கொண்டு இணையத்தில் நிகழ்த்தப்படும் துஷ்பிரயோகம், விரோதம் அல்லது தூண்டுதல் நடத்தை ஆகும். |
| **T7.3** | **Gendered disinformation / sexualised reputational abuse**<br>பால்நிலை அடிப்படையிலான தவறான தகவல் / பாலியல் ரீதியான நற்பெயர் அவதூறு | பால்நிலை அல்லது பால்நிலை அடிப்படையில் காலம் காலமாக பின்பற்றப்படுகின்ற ஒரே மாதிரியான பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் (Gender stereotypes) ஒரு தாக்குதலுக்கு முக்கியமான காரணியாக இருக்கும்போது, ஒரு நபரின் நற்பெயர், |

| | | |
|---|---|---|
| | | நம்பகத்தன்மை, பாதுகாப்பு அல்லது பங்களிப்பைக் கெடுக்கும் அல்லது ஏமாற்றும் நோக்கத்துடன் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டு பரப்பப்படும் தவறான அல்லது திரிக்கப்பட்ட தகவல்கள், கதைகள் அல்லது உள்ளடக்கங்கள் ஆகும். |

**T8 — Other, Emerging or Unclassified TFGBV**

வளர்ந்து வருகின்ற அல்லது வகைப்படுத்தப்படாத அல்லது ஏனைய தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள்

| குறியீடு | வகை | இந்த ஆய்வுக்கான வரையறை |
|---|---|---|
| **T8.1** | **Other/emerging TFGBV** வளர்ந்து வருகின்ற அல்லது அல்லது ஏனைய தொழில்நுட்பம் சார்ந்த பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் | T1–T7 ஆகிய பிரிவுகளால் போதிய அளவு உள்ளடக்கப்படாத, ஆனால் TFSGBV-இன் தொடக்கநிலை வரையறைக்கு (gateway definition) உட்படுகின்ற, தொழில்நுட்பம் சார்ந்த பால்நிலை அடிப்படையிலான நடத்தை இதில் உள்ளடங்குகின்றது. அடுத்தடுத்த வகைப்பாட்டியல் (taxonomy) ஆய்விற்காக இதன் சுருக்கமான விவரிப்பைப் பதிவு செய்யவும். |

| | | |
|---|---|---|
| **T8.9** | **Insufficient information to classify**<br>வகைப்படுத்தலுக்கு போதிய தகவல்கள் இன்மை | கிடைக்கக்கூடிய தகவல்கள் தொழில்நுட்பம் சார்ந்த பால்நிலை அடிப்படையிலான வன்முறை (TFGBV) இடம்பெற்றிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன, ஆனால், அதை ஒரு குறிப்பிட்ட வகையின் கீழ் துல்லியமாக வகைப்படுத்துவதற்குப் போதிய தகவல்கள் இல்லை. |